REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 2உ புதன் (18—9—57) ★ ★ வெளியூர்: புரட்டாசி 3உ வியாழன் (19—9—57) [இதழ் 82

## பிர்லாவின் அபாயச் சங்கு!

நியூயார்க், செப். 18—

"அமெரிக்காவிடமிருந்து இந்தியா 50 கோடி டாலர் கடனைப் பெறமுடிந்தாலொழிய இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தோல்வியடைந்துவிடும்" என்று பிரபல வடநாட்டுத் தொழிலதிபர் திரு. ஜி. டி. பிர்லா 'டைம்ஸ்' இதழுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

# 'ஜனநாயக விழைவே கழகத்தின் தோற்றம்'

## தலைநகரில் விடுதலை வார விழாத் துவக்கம்

### வட்டங்கள்தோறும் கோலாகலக் காட்சிகள்

### வீதிகள்தோறும் உரிமை முழக்கம்

*இன்னிசை நிகழ்ச்சிகள்; விடுதலை கீதங்கள்*

சென்னை, செப். 18—

பொதுச்செயலாளர் அறிக்கைக்கிணங்க நாடெங்கும் திராவிட நாடு விடுதலை வாரம் நேற்று முதல் துவங்கி, கோலாகல விழாவாகக் கொண்டாடப்பட்டுவருகிறது.

தி. மு. கழகக் கிளைகளும், சார்பு மன்றங்களும், படிப்பகங்களும் கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு—சிறுவர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்கியும், ஏழைகளுக்கு உணவளித்தும், இன்னிசை நிகழ்ச்சிகள் நடத்தியும், பொதுக் கூட்டங்கள் நடத்தி கொள்கை விளக்கம் தந்தும் அவரவர் சக்திக்கேற்ற வகையிலே பலவாறாக ஆங்காங்கே விடுதலை வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது.

சென்னையிலே உள்ள கிளைக் கழகங்களும், சார்பு மன்றங்களும் நேற்று எழிலுறக் காட்சியளித்தன. வீதிகளிலே தோரணங்கள் கட்டப்பட்டு, கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

திராவிடத்தின் தலைநகரான சென்னையில் நேற்று மூன்று மாபெரும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. ஒவ்வொரு கூட்டத்திலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்து கருத்து விருந்து பெற்றனர்.

### சைதையில்:

சென்னை, செப். 18—

சென்னை மாவட்ட தி. மு. கழகம், சைதை கிளையின் ஒத்துழைப்புடன், சைதாப்பேட்டை குயவர் தெருவில், திராவிடநாடு பிரிவினை வாரக் கூட்டம் ஒன்றினை நேற்று மாலை மிக சிறப்பாக நடத்திற்று.

கூட்டத்திற்கு, பெய்திருந்த மழையையும் பொருட்படுத்தாமல், பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

துவக்கத்தில் சேலம் தோழர் சீனிவாசன் அவர்கள் இயக்கப் பாடல்கள் பாடினர்.

கூட்டத்திற்கு தோழர் ஆர். எஸ். பாண்டியன் தலைமைதாங்கி, கூட்டத்தின் நோக்கத்தை விளக்கினர்.

அடுத்து தோழர் பவழவண்ணன் சிறிதுநேரம் பேசினர்.

பின்னர், தோழர் மு. கருணாநிதி அவர்கள், திராவிடத்தின் விடுதலையை வற்புறுத்தியும், அதற்கான காரணங்களை விளக்கியும் அரியதோர் உரையாற்றினர்.

பின்னர் தோழர் கோ. செங்குட்டுவன் சிறிதுநேரம் பேசினர்.

இறுதியாக, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கடந்த எட்டு ஆண்டுக் காலத்தில் கழகம் பெற்றுள்ள வளர்ச்சி குறித்தும், ஒன்பதாம் ஆண்டில் அடிபெடுத்துவைக்கும் கழகம், சந்தித்துக்கொண்டிருக்கும் பிரச்சினைகள் பற்றியும், நாளும் வளரும் கழகம் மக்களின் ஆதரவைப் பெற்றுவரும் விதம் குறித்தும், கழகத்தின் சட்டசபைப் பணி குறித்தும் அரியதோர் கருத்துரை ஆற்றினர்கள்.

தலைவர் முடிவுரையுடன் நன்றி நவிலப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது.

### சிந்தாதிரிப்பேட்டை:

திராவிட நாடு விடுதலை வாரத்தையொட்டி, நேற்று மாலை 6½ மணிக்கு, சிந்தாதிரிப்பேட்டை கலவச்செட்டித் தெருவில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சிந்தாதிரிப்பேட்டை தி. மு. கழகக் கிளையின் சார்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தோழர்கள் கண்ணதாசன், கரிகாலன் ஆகியோர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

தோழர் தி. மணிவண்ணன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கட்டுக்கடங்காத வகையில் ஏராளமான மக்கள் திரண்டிருந்து, அமைதியாகப் பேச்சைக் கேட்டு மகிழ்ந்தனர்.

தலைவர் முன்னுரையாகப் பேசுகையில், திராவிட நாடு விடுதலை பெறவேண்டிய அவசியத்தைக் குறித்து விளக்கினர்.

அடுத்து, தோழர் கரிகாலன் சிறிது நேரம் பேசினர்.

அவர் பேசுகையில், 'திராவிட நாடு விடுதலை' வார விழாக் கொண்டாடுவதின் நோக்கத்தையும் அதன் உட்பொருளையும் எடுத்து விளக்கினர்.

அடுத்து, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுமார் ஒருமணி நேரத்திற்குமேல், கழகக் கொள்கைகளையும், திராவிட நாடு பிரிய வேண்டிய அவசியத்தையும் பல ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி விளக்கவுரை ஆற்றிவிட்டு, சைதாப்பேட்டையில் நடந்துகொண்டிருந்த கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகச் சென்றுவிட்டார்.

பிறகு, தோழர் கண்ணதாசன் அவர்கள் சுமார் ஒருமணி நேரம் அரிய கருத்துவிருந்தளித்தார்.

அவர் பேசுகையில், தமிழ் நாட்டில் இந்தித் திணிக்கப்படுவதை வன்மையாகக் கண்டித்தார்.

திருவண்ணாமலையில் நடைபெற இருக்கும் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் இந்தி பற்றிய முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாமென்றும், இந்தியை எதிர்த்து தி. மு. கழகம் செய்யும் கிளர்ச்சிகளில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும், தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இந்தித் திணிப்பை எதிர்த்தே தீரவேண்டுமென்றும், இந்தித் திணிப்பின் மூலம் இந்த நாட்டில் ஒரு மாபெரும் கொந்தளிப்பை இந்திய அரசாங்கம் சமாளிக்க வேண்டி நேரிடலாம் என்றும், இதைத் தவிர்க்க வேண்டுமானால், இந்தித் திணிப்பு முயற்சியைக் கைவிட வேண்டுமென்றும் தமிழர்மீது இந்தியை எந்த சக்தியாலும் திணிக்க முடியாது என்று பார்லிமெண்டில் தோழர் கூறியுள்ளதையும், பேராசிரியர் சேதுப்பிள்ளை போன்றவர்களெல்லாம் இந்தித் திணிப்பைக் கண்டிப்பதையும் எடுத்துக்காட்டினர்.

இறுதியாக நன்றி கூறலுடன் கூட்டம் இரவு 9-30 மணிக்கு முடிவுற்றது.

கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் தோழர் கண்ணதாசன் அவர்களுக்கும் சிந்தாதிரிப்பேட்டைத் தி. மு. கழகச் சார்பிலும், மற்றும் பல மன்றங்கள் சார்பிலும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

சேலம் தேர்தல் வழக்கு நிதிக்காக, சிந்தாதிரிப்பேட்டை தி.மு. கழகச் சார்பில் ரூ. 25-ம், சிந்தாதிரிப்பேட்டை அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் ரூ. 5-ம் பொதுச் செயலாளர் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

உண்டியல் மூலம் வசூலான ரூ. 11 பன்மொழிப்புலவர் அப்பாத்துரையார் பொன் விழா நிதிக்கு அளிக்கப்பட்டது.

### வியாசர்பாடியில்:

சென்னை, செப். 18—

சென்னை—வியாசர்பாடி கழகத் தோழர்கள் நேற்று திராவிட நாடு விடுதலை வாரமும், உதய உதயசூரியன் படிப்பகத் திறப்பு விழாவும் நடத்தினர் விழாவிற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்புற செய்திருந்தனர். ஆங்காங்கு கொடிகள் கட்டப்பட்டு, மேடையும் (சுந்தா முதலித் தெருவில்) நன்கு அமைக்கப்பட்டிருந்தது.

விழாத் துவக்கத்தில் நாட்டுப் பண்கள் இசைக்கப்பட்டன.

விழாவுக்கு திரு. எஸ். சி. சிட்டிபாபு தலைமை வகித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## 'தொல்லைகள் கண்டு நாம் துவண்டுவிடவில்லை'

### 'நமது நேர்மையும் நாணயமுமே கழக வளர்ச்சிக்குக் காரணங்கள்'

### தலைநகர் விடுதலை வார விழாவில் பொதுச்செயலாளர் முழக்கம்

"'திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றத்திலேயே அழிந்துவிடும்—வளராது—தலைதூக்காது' என்று ஆரூடம் சொன்னவர்கள் பலருண்டு; 'அடுத்த பொங்கலுக்குள் அது அழிந்துவிடும்' என்று 'வரப்பிரசாத'மளித்தவர்களுமிருக்கிறார்கள்; ஆனால் நாம் அழிந்துவிடவில்லை—வளர்ந்திருக்கிறோம்.

"இன்று, நாடு நகரம், பட்டி தொட்டி, சிற்றூர் பேரூர் அனைத்திலும் கழகம் பரவி இருக்கிறது; நம் கொடி பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருக்கிறது. 2,000-த்துக்கு மேற்பட்ட கிளைக் கழகங்களை நிறுவியிருக்கிறோம்; 2 இலட்சத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறோம்; சட்டசபைத் தேர்தலுக்கு 122 இடங்களில் போட்டியிட்டு, 17 இலட்சம் வாக்குகளைப் பெற்று, 15 இடங்களில் வெற்றிபெற்று, 47 இடங்களில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பிருந்தும் சிலபல வசதிக் குறைவின் காரணமாக வெற்றி வாய்ப்பை இழந்து காங்கிரசுக்கு அடுத்தபடியாக ஓட்டுகளைப் பெற்றிருக்கிறோம்; சட்ட மன்றத்திலும் பாராளுமன்றத்திலும் நமது இலட்சியம் முழங்குகிறது.

"ஜனநாயக அடிப்படையிலே 1949-ம் ஆண்டிலே தோற்றுவிக்கப்பட்ட நம் கழகம், கண்ணியம்—கடமை—கட்டுப்பாட்டுடன் நல்ல முறையிலே பணியாற்றிக்கொண்டு வந்திருக்கிறது.

"எதிரிகள் நம்மை ஏசியும் பேசியும், கிண்டல் கேலி செய்தும் தூற்றியும், தொல்லை கொடுத்தும் நாம் வளர்ந்துவருகிறோம். எதிரிகளின் ஏசலினால்தான் நாம் வளர்கிறோம். தூற்றுதல்களுக்கும், தொல்லைகளுக்குமிடையேதான் நாம் வளர்கிறோம். மெள்ள மெள்ள—ஆனால் உறுதியாக வளர்கிறோம்.

"மாற்றான் தோட்டத்திலிருப்பதினாலேயே மல்லிகை மணக்காது என்று கூறும் இழி குணம் படைத்தவர்கள் அல்லர் நாங்கள்; ஆனால், மாற்றார்கள் கூறுகிறார்கள்—'மல்லிகை நாறுகிறது' என்று! எதிரிகள் நமக்கு இந்த எட்டாண்டுகளாகக் கொடுத்த தொல்லைகள் கொஞ்சநஞ்சமல்ல; இருப்பினும் நாம் வளர்ந்தே வருகிறோம்—மேலும் வளருவோம்.

"நம்மிடம் நேர்மையும் நாணயமும் நம்பிக்கையும் இருப்பதனால்தான் வளர்கிறோம். நமது கொள்கை இன்னும் ஏறாத நெஞ்சங்களிலெல்லாம் ஏறினால், புகாத செவிகளிலெல்லாம் புகுந்தால், தடவாத இதய நாடிகளையெல்லாம் தடவினால் நிச்சயம் மக்கள் நம் பக்கமே இருப்பர்.

"ஏசல்களையெல்லாம் குப்பையாகக் கருதி ஒதுக்கிவருகிறோம். குப்பை, எருக்குழியில் சேர்த்துவைக்கப்பட்டு, பின்னர் அது பயிருக்கு எருவாக இடப்படுவதுபோல, வளரும் பயிரான தி. மு. கழகத்துக்கு, ஏசல் என்னும் குப்பை—எருவாகப்பயன்படுகிறது. ஏசுவோர் ஏசட்டும்; தூற்றுவோர் தூற்றட்டும்; நாமும் வளருவோம்."

இவ்வாறு, நேற்று சிந்தாதிரிப்பேட்டையில் நடைபெற்ற திராவிட நாடு விடுதலை வார விழாப் பொதுக்கூட்டத்தில் பேசிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

## இந்திக்கு மாணவர் எதிர்ப்பு

### சட்டக் கல்லூரியில் மறியல்

சென்னை, செப். 18—

இந்தியப் பேரரசின் இந்தித் திணிப்புக்கு நாடெங்கும் மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தி வருவது அறிந்ததே.

இன்று சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் (எல்லோரும் படித்து பட்டம்பெற்று சட்டப் படிப்பு பயில்பவர்கள்) இந்திய அரசாங்கம் எப்படியேனும் தென்னாட்டில் இந்தியைத் திணிக்கும் நோக்குடன் செயல்படுவதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. எல்லோரும் கல்லூரித் திடலில்கூடி இந்தி பேசப்படாத பகுதிகளில் இந்தியைத் திணிக்கும் இந்தியப் பேரரசின் போக்கைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி அமைதியாகக் கலைந்தனர்.

## ஜோர்தான் மன்னர் முடிதுறப்பார்!

ஜோர்தான் மன்னர் தன் தம்பிக்கு முடியைத் தந்துவிட்டு சிம்மாசனத்தைத் துறப்பார் …ன்று ஒரு செய்தி வெளியாகி… …து.

…ார்தான், பாக்தாத் ஒப்பந் தத… கூட்டுச்சேர வேண்டும் என்… அமெரிக்கா தனது து… வர்… நிர்ப்பந்தம் செ… வருவதாக… …யே அவர் ப… …றப்பதாகவும் கெய்ரோ செய்தி கூறுகிறது.

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 18—9—57 புதன்


# இது நாணயமா?

இந்தி பொது மொழியாகத் திணிக்கப்படவேண்டும் என்ற மொழிக் குழுவின் முடிவை எதிர்த்து, தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கல்லூரி மாணவர்கள் அமைதியான முறையில் ஊர்வலங்களை நடத்திக் கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளனர். மாணவர்கள் நடத்திய அவ்வூர்வலங்களின் காரணமாக எந்தவித அமைதிக் கேடும் ஏற்பட்டுவிடவில்லை. எனவே, அவ்வூர்வலங்களைக் குறித்துக் குறைபட்டுக் கொள்ளவோ, அவைகளை நடத்திய மாணவர்களை நொந்து கொள்ளவோ வேண்டிய கட்டாயம் எவருக்கும் ஏற்படவே இல்லை.

இத்தகைய பொதுவிவகாரங்களில் மாணவர்கள் பங்கு கொண்டு தங்கள் கருத்தை அறிவிக்கலாமா கூடாதா என்பதில் ஒருமித்த கருத்தை எதிர்பார்ப்பதற்கில்லை. பொதுமக்களைப் பாதிக்கின்ற எந்த விவகாரமாக இருந்தாலும், அவ்வாறு பாதிக்கப்படுகின்றதில் மாணவர்களும் அடங்கி இருக்கின்ற காரணத்தால், அதுபற்றிய கருத்தறிவிக்க உரிமை மாணவர்களுக்கும் உண்டு என்று ஒரு சாராரும், மாணவர்கள் அறிவு முதிர்ச்சிப் பெறாத இளவயதினர்—கல்வி கற்கும் ஒன்றில் மட்டுமே கருத்தைச் செலுத்த வேண்டிய பருவத்தினர்—எனவே, மாணவர்கள் பொது விவகாரங்களில் தங்கள் கருத்தைச் செலுத்துவது கூடாது என்று ஒரு சாராரும் கூறிவருகின்றனர். தம் தம் வாதங்களை நிலைநாட்டுவதற்காக இருசாராரும் பற்பல காரணங்களைக் கிளத்துகின்றனர்.

பொது விவகாரங்களில் மாணவர்கள் பங்கு கொள்ளுவது அறவே கூடாது என்ற கருத்து எப்பொழுதும் ஒத்துவரக்கூடியதல்ல என்ற உண்மை, அவ்வாறு கூறுகிறவர்களின் கூற்றிலேயே அமைந்து கிடக்கிறது. அதாவது, இப்பொழுது நடைபெறுவது, பொதுமக்கள் கருத்துக்கு மதிப்பளித்து நடத்திவரும் பொதுமக்கள் அரசாங்கமாகும்; பொதுமக்கள் பிரதிநிதிகள் எடுத்துக்காட்டும் அறிவுரைகளுக்குச் செவிசாய்த்து இந்த அரசாங்கம் நடந்துகொள்ளும்; மக்களின் விருப்பு-வெறுப்புகளை எடுத்துக்காட்ட பொதுமக்கள் பிரதிநிதிகள் உள்ளனர்; எனவே, மாணவர்கள் பொது விவகாரங்களில் பங்குகொள்ள வேண்டிய தேவைக்கே இப்பொழுது இடமில்லை என்பதே இவர்கள் வாதம்.

இவர்கள் கூறும் இந்த வாதப்படி, பொதுமக்கள் விருப்பு - வெறுப்புக்கு மதிப்பு அளிக்காததும், பொதுமக்கள் பிரதிநிதிகளின் அறிவுரைகளுக்குக் கட்டுப்படாததுமாக [illegible]ரு ஆட்சி இருக்குமானால் [illegible]ந்த ஆட்சியின் செயல் மு[illegible]யைக் கண்டிக்க அல்லது அ[illegible] ஆட்சி [illegible]பத் திருத்தம் செ[illegible] நாட்டு [illegible] மாணவர்களும [illegible] முன்வருவது நியாயம—ஏற்கத் தக்கதுமாகும் என்றே முடிவுகட்ட வேண்டியதாகிறது. அத்தகு நிலையில், மாணவர்களின் இளமையும், கல்வி பயிலும் குறிக்கோளும் ஒதுக்கப்பட்டு, அவர்களுடைய பொதுப் பணி சீராட்டவும் பாராட்டவும்படுகிறது.

பொறுப்பாட்சி என்ற பெயர் கொண்டதாக இன்றைய காங்கிரசுக் கட்சியின் ஆட்சி இருந்தாலும், அந்த ஆட்சி எந்த அளவு பொதுமக்கள் கருத்துக்கு மதிப்பளித்து நடந்து கொள்வதாக இருந்துவருகிறது என்பதை நல்லறிவாளர்கள் அறிந்தே உள்ளனர். மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடும் நேரங்களில், காங்கிரசுக் கட்சி ஆட்சியை, பொது மக்கள் கருத்துக்கு மதிப்பளித்து நடக்கும் பொறுப்பாட்சி எனக் குறிப்பிட்டு, மாணவர்களைக் கண்டிக்க அல்லது நல்லுரை கூற முன்வரும் நல்லறிவாளர்கள் சிலர், வேறு நேரங்களில் இதே காங்கிரசுக் கட்சியின் ஆட்சியை எதேச்சாதிகார ஆட்சி என்றும், சர்வாதிகார ஆட்சி என்றும் வன்மையாகக் கண்டித்து உள்ளனர் என்பதையும் நாம் அறிந்தே இருக்கின்றோம். இக்கண்டனங்கள் எதைக் காட்டுகின்றன? காங்கிரசு ஆளவந்தார்கள் ஆட்சி பொதுமக்கள் கருத்தறிந்து செயல்படும் நல்லாட்சி என்பதையா? முக்காலும் இல்லை. நிற்க.

இந்தித் திணிப்பு, மாணவர்களை நேரடியாகப் பாதிக்கக் கூடியதாகும். எனவே, தமிழ்நாட்டு மாணவர்கள், இந்தித் திணிப்பை, அமைதியாக ஊர்வலம் வந்து கண்டித்துள்ளது மிகவும் பொருத்தமானதேயாகும். மாணவர்களின் அச்செயல் புனிதமானதாகும். அது பாராட்டத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

இந்தித் திணிப்புக்கு எதிராக மாணவர்கள் செய்துள்ள கிளர்ச்சி கண்டிக்கத்தக்கது என்று காங்கிரசு ஆளவந்தார்கள் கருதுகின்றனர்; கண்டிக்கவும் செய்கின்றனர். அவ்வாறு கண்டித்துவரும் திருக்கூட்டத்தின் தளபதியாக இன்று நிதி அமைச்சர் இருந்தும்வருகிறார்.

இந்தித் திணிப்பை எதிர்த்துக் கிளர்ச்சியில் ஈடுபடும் மாணவர்களைக் கண்டிப்பதுடன் நிதி அமைச்சர் இருந்துவிடவில்லை. அந்தத் திருப்பணியை மட்டுமே செய்துவரும் அளவுடன் அவர் இருந்துவிடுவாரானால், நாம் அதுபற்றி கடுகளவு கவலையும் கொண்டிருக்கமாட்டோம். அதற்கு மாறாக, தம்மிடத்திற்கேற்ற திருப்பணியை நிதி அமைச்சர் செய்து வருகிறார் என்று நாம் பாராட்டப் போவதில்லை என்றாலும் உள்ளுக்குள்ளாக நாம் திருப்தி பெற்றிருப்போம்.

ஆனால் அமைச்சரோ, இந்தித் திணிப்பை எதிர்த்துக் கிளர்ச்சி மேல் சென்ற மாணவர்களைக் கண்டிப்பதுடன் இருந்துவிடாது, மாணவர்கள் கூறாத ஒன்றை—அளிக்காத வாக்குறுதியை—மாணவர்கள் அளித்துள்ளதாக அபாண்டமாகப் பொய் கூறியுள்ளார்.

அதாவது,

'இந்திக் கிளர்ச்சியில் இனி ஈடுபடுவதில்லை என்று மதுரை கல்லூரி மாணவர்கள் உறுதி கூறியுள்ளதாயும், சென்னையிலும் மற்ற ஊர்களிலும் உள்ள கல்லூரி, பள்ளிக்கூட மாணவர்களும் இனி இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபடாமலிருப்பர் என்று தாம் நம்புவதாயும் கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் செய்தி நிருபர்களிடம் பேசுகையில் கூறினார்' என்று செய்தி தரப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சரிடம் அவ்வாறு உறுதிமொழி எதுவும் மாணவர்கள் சார்பில் அளிக்கப்படவில்லை என்று, மதுரை மாணவர்கள் மறுத்துள்ளனர். அம்மறுப்பு, மற்றோர் பகுதியில் வெளியிடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் இதற்கு என்ன சொல்லப் போகின்றார்? 'இது நாணயமா?' என, கல்வி அமைச்சரை நாம் கேட்கப்போவதில்லை—ஏற்கனவே அவரை நாம் நன்கு தெரிந்திருக்கின்ற காரணத்தால்! ஆனால் மாணவர் உலகம் 'இது நாணயமா?' எனக் கேட்கும்—கேட்கிறது. கல்வி அமைச்சர் பதில் என்ன? —எங்கே?

# மத்திய சர்க்காரின் பிடிவாதம் தளர்கிறது

## மாநிலங்களுக்கு சுயாட்சி உரிமை வழங்க முடிவு

## புதிய ஜகார்தா சர்க்காரின் திட்டங்கள்

ஜகார்தா, செப். 16—

இந்தோனேஷியாவில் சுமத்ரா மாநிலங்களில் அண்மையில் தோன்றிய அரசியல் கொந்தளிப்புகள், அந்தப் பிரதேச மக்கள் கோரிய பலனை ஓரளவு பெற்றுத்தர வழிவகுத்துள்ளன.

புதிதாக அமைந்துள்ள சர்க்கார், பிரதேசங்களுக்கு, ஜகார்தா மத்திய ஆட்சியில் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பரவலாக்கித் தரவும், மத்திய சர்க்காரின் வருமானத்தில் கோரியபடி மாநிலங்களுக்குப் பங்குகள் தரவும் சம்மதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

மத்திய சர்க்காருக்கும்—மாகாணத் தலைவர்களுக்குமிடையே அதிகாரங்களைப் பரவலாக்குவது பற்றி கடந்த 5 நாட்களாக மாநாடு ஒன்றில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன என்றும்; அதன் விளைவாக, பிரதேசங்களுக்கு விரைவாக சுய ஆட்சி வழங்கவும், ஏற்றுமதி வரியில் பங்கு தரவும், மத்திய நிர்வாகத்தில் மாற்றங்கள் செய்யவும், மற்றும், மாநிலங்களின் இதர கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யவும் உருவான திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

# ரூ. 50 முதல் ரூ. 125 வரை மாதந்தோறும் உபகாரச் சம்பளம்

## இந்தியைப் பரப்ப டெல்லி மேற்கொள்ளும் மற்றொரு கீழ்த்தரமான முயற்சி

சென்னை, செப். 14 -

இந்தி வழங்காத பகுதிகளில் வாழும் மக்களை இந்தி கற்றுக் கொள்ளச் செய்வதற்காக டெல்லி சர்க்கார் மேற்கொண்டிருக்கும் பல்வேறு வகைப்பட்ட கீழ்த்தரமான முயற்சிகளுள் ஒன்று, இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பத்தாம் வகுப்புப் படித்து முடித்தவர்கள், இந்தியில் இடைநிலைக் கல்லூரி வகுப்பு, பி. ஏ., எம். ஏ. பட்டப் படிப்பு இவற்றில் சேர்ந்துகொள்வதற்கு மாதந்தோறும் ரூ. 50 முதல் ரூ. 125 வரை உபகாரச சம்பளம் அளிக்கப் போவதாக டெல்லி அறிவித்துள்ளது.

இந்த வகுப்புகளில் சேர்ந்து படித்து, இந்தி மொழிக் கல்வியில் தேர்ச்சி பெறுகிறவர்கள், கட்டாயமாக வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்படுவார்கள் என்பதையும், மூன்று ஆண்டுகளுக்கு சர்க்காரிடம் கட்டாயம் வேலை செய்ய வேண்டும் என்றும் நிபந்தனை மூலம் அறிவித்துள்ளார்கள்.

# நெய்வேலியும் இந்தியப் பேரரசும்!

புதுடில்லி, செப் 17—

இந்தியப் பேரசு, தென்னாட்டையும் தொழில்மயமாக்க எண்ணம் கொண்டுள்ளதாக வெளிக்குக் காட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நெல்வேலித் திட்டத்திற்கு இன்னும் ரூ. 3½ கோடி அளவிற்கு அந்நியச செலாவணி வசதி தேவைப்படுகிறதாம்; இன்னும் சில இயந்திரங்கள் வரவேண்டியுள்ளதாம்!

தேசிய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நெய்வேலித் திட்டம் பற்றிப் பேசப்பட்டதாம். நெய்வேலிக்குத் தொடர்புகொண்ட சூட்டு மின்சார நிலையம் ஏற்படுத்துவதற்குத் தேவையான உதவியை ரஷ்யா அளிக்க முன்வந்திருப்பதாலும், நெய்வேலித் திட்டத்தைக் கைவிடுவது சூட்டு மின்சாரத் திட்டத்தையும் கைவிடுவதாகும் என்பதாலும், எப்படியும் நெய்வேலித் திட்டத்தை நிறைவேற்றுவது என்று முடிவு செய்யப்பட்டதாம்.

நெய்வேலித் திட்டத்திற்குத் தேவைப்படும் அந்நியச் செலாவணியை எப்படியும் ஏற்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டதாம்.

நெய்வேலித் திட்டம் தடைபட்டால், மின்சாரத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இயலாமற் போய்விடும் என்பதாலேயே, இப்போது இந்தியப் பேரசு நெய்வேலித் திட்டத்தை எப்படியும் நிறைவேற்றித் தீரவேண்டிய நிலைமைக்கு உள்ளாகியுள்ளது.

# ஆப்பிரிக்காவில் சாதிச் சண்டை

ஜோகன்ஸ்பர்க், செப். 17—

ஆப்பிரிக்காவில் பூர்வீகக் குடிமக்களான 'ஜுலு' சாதியினருக்கும், 'பஸீட்டோ' சாதியினருக்குமிடையே நடைபெற்ற கலகத்தில் 32 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 18 மாத வயதுகூட நிரம்பாத குழந்தைகள் உள்பட 12 பேர் காயமுற்று வைத்திய விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

# ஆந்திர மாவட்டங்களில் அரிசிக்கு உச்ச விலை நிர்ணயம்

விஜயவாடா, செப். 16—

ஆந்திராவில் கிருஷ்ணா, மேற்கு கோதாவரி, கிழக்கு கோதாவரி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இந்த சீசனில், சில ரக அரிசிக்கு டெல்லி சர்க்கார், மொத்த விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

அத்தியாவசியப் பொருள்கள் சட்டப்படி அதிகாரிகள் மூலம் தங்களைக் கெடுபிடி செய்யவேண்டாம் என்றும், தங்களிடமுள்ள உபரி அரிசியை சர்க்காருக்கு நியாயமான விலையில் தாங்களாகவே தந்துவிடத் தயாராக இருப்பதாகவும் ஆந்திர வியாபாரிகள் தெரிவித்திருந்ததின் எதிரொலியாகவே உச்ச விலையை நிர்ணயிக்கும் இந்த அறிவிப்பினை டெல்லி சர்க்கார் வெளியிட்டிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

இந்த உச்ச விலைக்குமேல் அதிகம் கேட்கிற எவரும் தண்டனைக்குரியவர்கள் என்றும் சர்க்கார் கூறியுள்ளது.

# 'அமெரிக்க அரிசி வேண்டாம்'

## கேரள முதல்வர் காரணம் கூறுகிறார்

புதுடில்லி, செப். 16—

'அமெரிக்க அரிசி மிக விலை உயர்வாக இருக்கிறது; அதனால்தான் நாங்கள், அதனை, வேண்டாம் என்று கூறினோம்'' என்று, கேரள முதல்வர் நம்பூதிரிபாட் கூறியிருக்கிறார்.

மேலும், 'அந்த அமெரிக்க அரிசி, எங்கள் ருசிக்கு உகந்ததாக இல்லை' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'டெல்லி சர்க்கார், அமெரிக்க அரிசிக்கு மானியத் தொகை அளிக்கிறார்கள்; என்றாலும், நியாயவிலைக் கடைகளில் கிடைக்கும் அரிசி மணங்கு ரூ. 16; ஆனால் அமெரிக்க அரிசியின் விலை, மணங்கு ரூ. 20 ஆகிறது' என்றும் அவர் தகவல் தந்துள்ளார்.

# ஆந்திரத்திற்கு எதிராக கேரளத்தின் புகார்?

## அரிசி ஆலை அதிபர்கள் மகசர்

விசயவாடா, செப். 17—

''இப்போது ஆந்திர மாநில அரிசி ஆலைகளில் உள்ள உயர் ரக அரிசி கெட்டுப்போகும் நிலையில் உள்ளது. இதன் காரணமாக, ஆலை அதிபர்களுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படும். சட்டப்படி கடந்த மூன்று மாதங்களின் விலையைக் கொண்டு அரிசி கொள்முதலுக்கான விலை நிர்ணயிக்க வேண்டும். ஆனால் உதவி உணவு நெறியாளர் அவ்வாறு விலையை நிர்ணயிக்கவில்லை'' என்று ஆந்திர மாநிலத்தில் உள்ள அரிசி ஆலை அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவர்கள், ஆந்திர முதலமைச்சரிடம் கொடுத்துள்ள மகசரில், மத்திய அரசாங்கம் இறக்குமதி செய்யபட்ட அரிசியை மணங்கு ரூ. 16 விலையில் கேரளத்திற்குத் தர முன்வந்ததால், கேரள அரசாங்கம், ஆந்திரத்தில் உள்ள உபரி அரிசியை நியாயமான விலையை நிர்ணயித்து வாங்க முன்வரவில்லை என்றும், ஆந்திரத்திற்கு எதிராக மத்திய அரசாங்கத்திடம் கேரளம் புகார் செய்தது என்றும் தெரிவித்துள்ளனர்.

# தென் மண்டலக் குழுக் கூட்டம்

தென் மண்டலக் குழுவின் முதல் கூட்டம் பெங்களூரில் செப்டம்பர் 20-ந் தேதி இந்திய உள்நாட்டு அமைச்சர் பந்த் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# 1-மைல் நீள ரயில் பாதை அமைக்க...

## வெள்ளையர் செலவிட்டது போல இருபது மடங்கு

### காங்கிரஸ் ஆட்சியின் இலட்சணம் பற்றி லோகியா தரும் கணக்கு

வெள்ளையர் ஆட்சிக்காலத்தில், சுமார் 35,000 மைல் நீள இரயில் பாதை அமைக்க ரூ. 666 கோடி தான் செலவிடப்பட்டது; ஆனால், கடந்த பத்து ஆண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியில், சுமார் 600 மைல் நீள இரயில் பாதை அமைக்க ரூ. 268 கோடி செலவாகியுள்ளது. இந்த நிலை, ஒவ்வொரு மைல் நீள இரயில் பாதை அமைக்கும் செலவு 20 மடங்கு அதிகரித்திருக்கிறது என்பதைக் காட்டும்; ஆனால் அதே நேரத்தில் பொருள்களின் விலை நான்கு மடங்கிற்கு மேல் ஏறியிருக்கவில்லை.''

இப்படி மக்களின் பணம் பாழாக்கப்படுவதாக சோஷலிஸ்டுத் தலைவர் லோகியா, ஐதராபாத் கட்சிக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

''வெள்ளையராட்சிக் காலத்தில், ஒரு ஏகர் நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசன வசதி செய்ய ரூ. 45 செலவிடப்பட்டது; ஆனால் காங்கிரஸ் ஆட்சியில், சுமார் ரூ. 600 செலவிடப்படுகிறது.

''ஐந்தாண்டுத் திட்டங்களும் அப்படியேதான். திட்டத்தை கவனமாகப் பரிசீலித்தால், திட்டம் உருவான அடிப்படையே தவறானது என்பதுடன், ஒழுங்கீனங்களும் திறமைக் குறைவும் மிகுந்த ஒரு நிர்வாகத்தினால், திட்டத்தைச் சரிவர நிறைவேற்ற முடியாது என்பதையும் தெரிந்துகொள்ள முடியும்.

''ஏழை - எளிய மக்களுக்கு உணவு, உடை, வீடு போன்ற வசதிகளைத் தருவதற்காக 75 சதவிகிதத்தையேனும் அடிப்படையாகக்கொண்டு, ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டாலன்றி, நாட்டில் எந்த வித முன்னேற்றமும் காண முடியாது. இன்று சர்க்கார், இந்த இனங்களுக்காகச் செலவிட உத்தேசித்திருப்பது 25 சதவிகிதம் மட்டுமே; எஞ்சியவை மேலைநாடுகளைக் 'காப்பி' அடித்து தயாரிக்கப்பட்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றன.''

## 'கனபாடி'கள் சங்கம்!

### பருமனான மக்கள்சபை உறுப்பினர் கோரிக்கைகள்

புதுடில்லி, செப். 13—

பருமனான மக்கள் சபை உறுப்பினர்கள், ஏற்கனவேயே வெளிவந்த செய்திகளின்படி, ஒரு சங்கம் அமைத்திருக்கிறார்களாம்!

இந்த 'கனபாடிகள்' சங்கத்திற்கு 'பீம் கிளப்' எனப் பெயர் சூட்டியுள்ளார்கள்.

இதில் உறுப்பினராக, மக்கள் சபை உறுப்பினர்கள் குறைந்த பட்சம் 200 பவுண்டு எடையிருக்க வேண்டுமாம்.

கேரளத்தைச் சேர்ந்த சுயேச்சையான ஈஸ்வர அய்யர் இதற்குத் தலைவர்; இவர், 318 பவுண்டு எடையுடையவர் செயலாளராகியுள்ள கனத்த சரீரம், பீகாரைச சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினரான ராம் சுபாசிங் என்பார்! உள்நாட்டு மந்திரி பந்த், சங்கத்தின் ஆதரவாளராயிருக்கிறார்.

#### மூன்று கோரிக்கைகள்

சங்கத்தினர், முதல் கூட்டத்திலேயே மூன்று கோரிக்கைகளை எழுப்பியுள்ளனர்.

(1) இரயில் பிரயாணம் செய்யும்போது, தூங்குமிடம், பெட்டியின் கீழ்த்தட்டிலேயே ஒதுக்கப்படவேண்டும்; (2) விமானப் பிரயாணம் செய்யும்போது விசாலமான இட வசதி; (3) டெல்லி விடுதிகளில் தரப்பட்டுவரும் கட்டில்கள், மரத்தாலானவையாயிருக்கின்றன-அவற்றிற்குப் பதில் இரும்புக் கட்டில்கள்வேண்டும்.

தலைவர் ஈஸ்வர அய்யர் தனக்குத் தரப்பட்டிருந்த கட்டிலில்ஒரு முறைதான் படுத்தபோது, உடைந்து நொறுங்கிவிட்டதாகக் கூறியிருக்கிறார்.

## அசாமில் பணியாற்றும் டெல்லி சர்க்கார் ஊழியர்கள்

### தனிப்பட அலவன்சு வழங்க சர்க்கார் முடிவு

புதுடில்லி, செப். 16—

அசாம் மாநிலமெங்கும் பணிபுரியும் மத்திய சர்க்கார் ஊழியர்களில், கெஜட் பதிவு பெறாதவர்களுக்கு நஷ்டஈட்டு அலவன்சு என்ற பெயரில் ஒரு 'படி' வழங்க டெல்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்.

தபால்—தந்தி ஊழியர்களின் வேலைநிறுத்த அறிவிப்பில் குறிக்கப்பட்டிருந்த கோரிக்கைகளுள் இதுவும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மக்கள் தொண்டர் படைப் பயிற்சி

### சென்னையில் துவங்கும்

சென்னை, செப். 16—

நல்ல உடற்கட்டும், விழிப்புணர்ச்சியும், ஒழுக்கமும், நேர்மையும் கொண்ட 'மக்கள் தொண்டர் படை'யை உருவாக்க இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

சென்னையில் அக்டோபர் 5-ந் தேதி முதல் நவம்பர் 3-ந் தேதி வரை இப்படைக்குப் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்துள்ளது.

18 வயது முதல் 40 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கு இந்தப் பயிற்சி தரப்பட்டு, எதிர்காலத்தில் எந்தத் துறையிலும் நம்பிக்கையுடனும், திறமையுடனும் பொறுப்பேற்க அவர்களைத் தகுதியுள்ளவர்களாகச் செய்ய அரசாங்கம் கருதியுள்ளதாம்.

பயிற்சி காலத்தில் இலவசமாக உடை, உணவு, இடவசதி, மருத்துவ உதவி மற்றும் ரூ. 15 படிச் செலவு ஆகியவை தரப்படுமாம்.

பயிற்சிபெற விரும்புவோர், அக்டோபர் 2-ந் தேதி முதல் 4-ந் தேதி வரையில் பயிற்சி நிலையத்தில் நேரில் பதிவு செய்து கொள்ள வேண்டுமாம்.

### 3,000 கூட்டுறவு பண்ணைகளாம்

இன்னும் 3 ஆண்டுகளில் 3,000 கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை ஏற்படுத்தலாம் என்று திட்டக் குழு, தேசிய அபிவிருத்திக் குழுவிற்கு யோசனை கூறியுள்ளதாம்.


★★★★★★-★★★★-★★★★★★★★-★★★★-★★★★★★★★★★★★★★

வடாற்காடு மாவட்ட

# தி. மு. கழக மாநாடுகள்

## திருவண்ணாமலையில்

சாமி அரங்கில் நடைபெறும்.

★

## 21-9-57: இந்தி எதிர்ப்பு மாநாடு

தலைவர்: சுவாமி அருணகிரிநாதர்

திறப்பாளர்: சி. வி. எம். அண்ணாமலை

★

## 22-9-57: தி. மு. க. 3-வது மாநாடு

தலைவர்: அன்பில்-தருமலிங்கம்

திறப்பாளர்: வெ. கிருட்டினமூர்த்தி M. A.

★

## அண்ணா, நெடுஞ்செழியன்

| | |
|---|---|
| அன்பழகன் | சம்பத் |
| அப்பாதுரை | சத்தியவாணிமுத்து |
| அரங்கண்ணல் | சி. பி. சிற்றரசு |
| ஆசைத்தம்பி | தாமரைச்செல்வன் |
| கே. ஆர். இராமசாமி | தில்லை-வில்லாளன் |
| எஸ். எஸ். இராசேந்திரன் | என். வி. நடராசன் |
| கருணாநிதி | டி. வி. நாராயணசாமி |
| கண்ணதாசன் | மதியழகன் |
| கோவிந்தசாமி | கி. மனோகரன் |

மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்து கொள்வர்.

★

## எம். ஜி. ஆர். குழுவினர் நடிக்கும் இன்பக்கனவு, அட்வகேட் அமரன்

நாடகங்கள் இரவு 9-30 மணிக்கு நடைபெறும்.

## கட்டணம்: ரூ. 5, 3, 1.--பெண்கள்: அணா 8.

—வரவேற்புக் குழு

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★


## மலேயா 'இந்தியர்' நலன் காக்க புதிய கட்சி

### தந்த உறுதிமொழிகளைப் பிரதமர் மீறுவதாகக் குற்றச்சாட்டு

கோலாலம்பூர், செப். 16—

மலேயாவில் வாழும் 'இந்தியர்'கள், புதிய சர்க்காரிடமிருந்து தங்களுக்குரிய நியாயமான உரிமைகளைப் பெறுவதற்காக, புதியதோர் கட்சியை உருவாக்கிவருவதாகத் தெரியவருகிறது.

இப்போது, மலேயா 'இந்தியர்'களின் பிரதிநிதித்துவம் பெற்ற கட்சியாகத் தோற்றமளிக்கும் மலேயா இந்தியக் காங்கிரஸ், பலவீனமடைந்து, அரசியலில் செல்வாக்கு மங்கிவருவதின் விளைவாகவே புதிய கட்சி உருவெடுப்பதாகக் கூறப்படுகிறது.

பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான், மலேயா இந்தியக் காங்கிரஸ், முக்கூட்டுக் கட்சியில் ஒரு உறுப்பினர் என்ற வகையில், சுதந்திரம் பெற்ற பின்னர், 'இந்தியர்'களுக்கு எல்லாத்துறைகளிலும் உரிய பங்கும், நீதியும் வழங்குவதாகக் கூறியிருந்ததற்கு மாறாக, உறுதிமொழிகளை மீறும் வகையில் சில உயர் பதவிகளுக்கு நியமனம் அறிவிக்கும்போது, இந்தியர் எவர் பெயரும் அதில் இல்லாமலிருப்பதும் புதிய கட்சி உருவாவதற்குக் காரணமாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

புதிய கட்சியை உருவாக்குவதில், இந்தியக் கட்சிகளின் பெடரேஷன் என்ற இயக்கத்தைக் கண்ட தலைவரான ஆர். ரமணி என்பாரும், மலேயா இந்தியக் காங்கிரசின் முன்னாள் தலைவரான கே. எல். தேவாசர் என்பாரும், மலேயா தமிழர் சங்கச் செயற்குழு உறுப்பினரும், மலேயா இந்திய வர்த்தகக் கழகங்களின் தலைவருமான எஸ். ஓ. கே. உபயதுல்லா என்பாரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

## புதிய அடக்குமுறை ஆயுதமாம்!

### இனி துப்பாக்கியால் சுட வேண்டியதில்லையாம்!

ஆமதாபாத், செப். 16—

சுதந்தர இந்தியாவில் அகிம்சா மூர்த்திகள் அடிக்கடி துப்பாக்கியின் துணைகொண்டு மக்கள் மன்றத்தை அடக்கிவரும் அவலப் போக்கினை மாற்றியமைக்க இந்தியப் பேரரசு அக்கறை செலுத்தி வருவது தெரிந்த ஒன்றாகும்.

பம்பாய் போலீஸ் இலாகா இன்ஸ்பெக்டர்-ஜெனரல், இப்போது புதிய முறை ஒன்றைக் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளார்.

இனி துப்பாக்கியின் தயவு தேவையில்லையாம்! மக்களை சுட்டுக் கொல்லவேண்டிய நிலை ஏற்படாதாம்!

பம்பாய் மாநிலப் போலீஸ் பம்பாய், ஆமதாபாத் நகரங்களில் இந்தப் புதிய முறையைக் கையாண்டு அமைதியை நிலை நாட்டி, ஆர்ப்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்தியுள்ளதாம். இந்தப் புதிய முறையில் பம்பாயில் 3,000 பேர் பயிற்சி பெற்றுள்ளனராம்.

'இனி ஆர்ப்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்தத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய அவசியமிருக்காது' என்று பம்பாய் ஐ.ஜி. நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## விற்பனை வரிக்குப் பதில் எக்சைஸ் வரி!

### யோசனைபற்றி முடிவெடுக்கக் கோருகிறார் சுப்பிரமணியம்

புதுடில்லி, செப். 14—

துணி, புகையிலை, சர்க்கரை மற்றும் இதர பொருள்களுக்கு விற்பனை வரிக்குப் பதிலாக 'எக்சைஸ்' வரி விதிக்கலாம் என்ற யோசனைபற்றி சீக்கிரமே முடிவெடுக்க வேண்டுமென தமிழ்நாட்டு நிதி மந்திரி சுப்பிரமணியம் கோரியிருக்கிறார்.

இது குறித்து, மத்திய நிதி மந்திரி டி. டி. கே. அமெரிக்கப் பயணத்தை முடித்துத் திரும்பியதும் நடைபெறும் மாநில நிதி மந்திரிகள் மாநாட்டில் முடிவெடுக்கலாம் எனக் கூறப்படுகிறது.

## திபெத்துடன் வர்த்தகம்

### வட்நாட்டு வியாபாரிகளின்கஷ்டம்

### சீன சர்க்காருடன் டில்லி கடிதப் போக்குவரத்தாம்

இமாசலப் பிரதேசம், கங்ரா, கர்ஹ்வால் முதலிய இடங்களைச் சேர்ந்த இந்திய வியாபாரிகள், திபெத் நாட்டுடன் வர்த்தகம் செய்வதில் கஷ்டங்கள் பல அனுபவிக்க வேண்டியுள்ளது என்றும், இதுகுறித்து டெல்லி சர்க்கார் இன்னும் சீன சர்க்காருடன் கடிதப் போக்குவரத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் மக்கள்சபையில், கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போது உதவி வர்த்தக மந்திரி சதீஷ் சந்திரா தெரிவித்திருக்கிறார்.

### நியோகி கூறும் திட்ட அடிப்படை

'இரயில்வேக்களின் அபிவிருத்தியே திட்டத்தின் மிக முக்கியமான அம்சம்' என்று, திட்டக் குழு உறுப்பினர் நியோகி, அபிவிருத்திக் குழுவில் தெரிவித்துள்ளார்.


## சென்னை சர்க்கார் தீவிர பஸ் போக்குவரத்து

### யூனியன் தோழர்கள் கவனத்திற்கு

தோழர்களே!

கடமை உணர்ச்சியோடு பணியாற்றி முன்னேறும் உங்களுக்கு என் நன்றியும், பாராட்டுதலும் உரியவாகுக. கோரிக்கைகளை மெள்ள மெள்ள, ஆனால் நிச்சயமாக நிறைவேற்றிவரும் நமது யூனியனின் மகத்தான வெற்றியும், அதைத் தொடர்ந்துள்ள நமது வெற்றியும், கூட்டுணர்ச்சியிலும் ஒத்துழைப்பிலும் இருக்கிறது. மந்திரி வெங்கட்ராமன் அவர்களைச் சந்தித்து நானும், தோழர் டாக்டர் கிருஷ்ண பிள்ளை அவர்களும், கேட்டுக் கொண்ட வேண்டுகோட்களிலே முக்கியமான சில நிறைவேறியிருக்கின்றன என்பது உங்களுக்குப் புரியும். ஓய்வு நேர வேலை (Off time duty) சம்பளமும் உங்கள் கரங்களுக்குக் கிடைத்துவிட்டிருக்கிறது. நான் அந்த நேரத்திலே இல்லாவிட்டாலும், நமது முதியவர் டாக்டர் கிருஷ்ண பிள்ளை அவர்கள் சென்ற 4-ந் தேதி பெற்ற அழைப்பை ஏற்று அதிகாரிகளைச் சந்தித்தார்; அதன் விளைவாக, 'நயா பைசா' வினாலே ஏற்பட்ட குழப்பமும், அதனாலே வேதனைக்குரிய கண்டக்டர்கள் அனுபவிக்கவிருந்த தொல்லையும் தவிர்க்கப்பட்டதும் நீங்கள் அறிந்ததுதான்.

நமது யூனியன் மேலும் வளர பொலிவோடும் வலிவோடும் திகழ இம்மாதத்திலேயே தோழர் மு. கருணாநிதி அவர்களை அழைத்து விரிவானமுறையில் கூட்டம் நடாத்தத் திட்டமிட்டிருக்கிறோம். அக்டோபர் 10-ந் தேதியன்று, தோழர் க. அன்பழகன் அவர்கள் யூனியன் சார்பிலே பேச ஒப்பியிருக்கிறார்.

உற்சாகத்தோடும் உணர்ச்சியோடும் பணியாற்றுங்கள்! இடையிடே குழப்பத்தை உருவாக்கநினை நம் குள்ளநரித் தந்திரத்திற்கு இடமளிக்கவேண்டாம்! நம்பிக் தளராதீர்! வெற்றி நமதே!

அ.

தலைவர்,

செ. ச. தீ. ப. போ. யூ.

சென்னை.

ஆசிரியருக்குக் கடிதம்:

# மதுரை மாணவர்கள்பற்றி 'கனம்' நிதி அமைச்சர் கூற்று

## உண்மையில் நடந்தது என்ன?

ஐயா,

10—9—57-ல் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடந்த எல்லாக் கல்லூரிகள் மாணவர்கள் கூட்டம் 'கனம்' நிதியமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க நடத்தப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் மொழிச் சிக்கல் பற்றியும், செல்வ, செலவின வரி விதிப்புப்பற்றியும் பேசுமாறு நிதியமைச்சர் அவர்களை கூட்டத்திற்குத் தலைமை வகித்த அமெரிக்கன் கல்லூரி மாணவர் தலைவர் வேண்டிக் கொண்டார். அதில் மொழிச் சிக்கல்பற்றி அமைச்சர் பேசுகையில், 29—8—57 அன்று மதுரையில் கல்லூரி மாணவர்கள் செய்த கிளர்ச்சியினைக் குறிப்பிட்டு அமைச்சர் அவர்கள் கூறியதாவது :—

"தற்சமயம் தமிழ்தான் போதனா மொழியாக வேண்டும் என்ற கிளர்ச்சி நடத்தினார்கள் என நினைக்கிறேன். இது தவறாக எனக்குப் படுகிறது. பல்கலைக் கழகந்தான் இம்மொழிச் சிக்கலைத் தீர்க்கவேண்டும்" ('தமிழ் நாடு: 12—9—57) என்று கூறினார்.

29—8—57 அன்று கல்லூரி மாணவர்களாகிய நாங்கள் மதுரையில் நடத்திய கிளர்ச்சி அமைச்சர் குறிப்பிட்டதுபோல், 'பல்கலைக் கழகத்தில் தமிழ்தான் போதனா மொழியாக வேண்டும்' என்பதற்காக நடத்தப்பட்ட கிளர்ச்சி அல்ல; அண்மையில் வெளியிடப்பட்ட பி. ஜி. கெர் இந்தி ஆட்சி மொழிக் குழுவின் அறிக்கையினையும், அதில் கண்ட கட்டாய இந்தித் திணிப்பு முயற்சியினையும் எதிர்த்தே மாபெரும் கிளர்ச்சி செய்தோம். அக்கிளர்ச்சியினை நிதியமைச்சர் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு பேசியதற்கு மிகவும் வருந்துகிறோம். அதுமட்டுமல்லாமல்,

"மதுரையைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் இந்தி மொழித் திணிப்பை எதிர்த்துக் கிளர்ச்சி எதையும் இனி நடத்துவதில்லை என உறுதிமொழி கொடுத்துள்ளனர்" என்று நிதியமைச்சர் அவர்கள் 12—9—57-ல் சென்னை நிருபர்களிடம் கூறியுள்ளார்கள்.

இது ஒரு பெருந் தவறாகும்; உண்மைக்கு மாறானதும் ஆகும். மாணவர்கள், நிருபர்களிடம் அமைச்சர் கூறியுள்ளதைப்போல் எந்தவித உறுதிமொழியும் கொடுக்கவில்லை. மேலும் அமைச்சர் அவர்கள், கல்லூரிக் கூட்டத்தில் இந்தி மொழிச் சிக்கல்பற்றிப் பேசவே இல்லை.

எனவே, தானாக ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டு, அதிலே மாணவர்கள் கொடுக்காத உறுதிமொழிகளைக் கொடுத்ததாகவும், நாட்டு மக்களிடையே ஒரு பொறுப்புமிக்க அமைச்சர் பரப்பிவருவது கண்டு கல்லூரி மாணவர்களாகிய நாங்கள் பெரிதும் வருந்துகிறோம். எதிர்காலத் தலைவர்களாகிய எங்களைப் பற்றி நாட்டு மக்கள் தவறாக எண்ணும் படியும், இழித்தும், பழித்தும் பேசும்படியும் அமைச்சர் அவர்களின் பேச்சு அமைந்திருப்பது கண்டு வெட்கப்படுகிறோம்; வேதனைப்படுகிறோம்.

தமிழ் மொழியை, தமிழ் நாட்டை, தமிழ் மக்களைப் பாதிக்கும் எந்தவிதத் தீயச் செயல்களையும் எதிர்த்து எந்த நேரத்திலும் மாபெரும் கிளர்ச்சி செய்ய என்றும் தயங்கமாட்டோம் என்பதை நாட்டு மக்களுக்கும், 'கனம்' அமைச்சர் அவர்களுக்கும் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கல்லூரி மாணவர்கள்,
மதுரை: 13—9—57

## வ.ஆ. மாவட்ட கிளைக் கழகச் செயலாளர்கட்கு:

★

திருவண்ணாமலையில் வரும் செப். 21, 22-ந்தேதிகளில் நடைபெறும். வடஆற்காடு மாவட்ட தி. மு. க. மூன்றுவது மாநாடுகளில் பணியாற்ற, இதுவரை வந்துள்ள தொண்டர்களின் எண்ணிக்கை போதுமானது அல்ல என்பதால், மாவட்டத்தில் உள்ள கிளைக் கழகச் செயலாளர்கள் உடனடியாகத் தொண்டர்களைத் திரட்டி, செப். 20-ந்தேதி மாலைக்குள் திருவண்ணாமலை வந்து சேருமாறு அனுப்பித்தரக் கேட்டுக் கொள்கிறேன்.

என்று, மாநாட்டு தொண்டர் படைத் தலைவர் தோழர் நி. மா. லோகநாதன் அறிவிக்கிறார்.

## திருவைகுண்டம் வட்டார தி. மு. க. கிளைகளுக்கு வேண்டுகோள்:

"திருவைகுண்டம் தி. மு. க. கிளையின் 7-வது ஆண்டுவிழா 28—9—57-ல் நடக்கவிருப்பதையொட்டி, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வருகைதரவிருக்கிறார்கள். எனவே வட்டாரக் கிளைகள், சேலம் தேர்தல் வழக்கு நிதியைத் துரிதமாக வசூலித்து, பொதுச்செயலாளரிடம், மேற்படி தேதியில் நேரில் கொண்டுவந்து சேர்க்க வேண்டுகிறேன்"

என, திருவைகுண்டம் வட்டார [illegible] தோழர் வ. சேகவீரராமசந்திரன் கேட்டுக் கொள்கிறார்.

## தொக்குப்பட்டிக்கு அண்ணா, சம்பத் வருகை

ஊராட்சி மன்றத்தில் வரவேற்பு

20—9—57 அன்று தொக்குப்பட்டிக்கு வருகைதரவிருக்கும் அண்ணா அவர்கட்கும், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கட்கும் தொக்குப்பட்டி ஊராட்சிமன்ற சார்பில் சிறப்பான முறையில் வரவேற்பளிப்பதென கடந்த 14—9—57-ல் நடந்த மேற்படி ஊராட்சி மன்றக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## கழகக் கூட்டங்கள்

★

**பழந்தண்டலம்:**
19—9—57 மாலை 5-30 மணிக்கு
தலைவர்: தி. ந. சம்பந்தம்
பேசுவோர்:
என். வி. நடராசன்
காஞ்சி-கல்யாணசுந்தரம்

★

**பண்டரக்கோட்டை:**
என். எஸ். கே. திடலில்
தலைவர்: இரே. இளம்வழுதி
பேசுவோர்:
கே. எம். வேலு
சபாபதி

★

**சின்னதாராபுரம்:**
20—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர்:
கே. எஸ். எஸ். பெரியார்
பேசுவோர்:
அண்ணா
ஈ. வெ. கி. சம்பத்
அன்பில்-தருமலிங்கம்
மு. குழந்தைவேல்
என். இரத்தினம்
சண்முகம்
கரிகாலன்
(மாலை 4-மணிக்கு ஊர்வலம் நடைபெறும்)

★

**திருவாலங்காடு:**
ஊராட்சி மன்றப் பூங்காவில்
20—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: சி. சுப்பிரமணியன்
பேசுவோர்:
கி. மனோகரன்
என். கிட்டப்பா
சு. பத்மநாபன்
கோ. சி. மணி
இன்னிசை:
குத்தாலம் அரங்கநாதன் குழுவினர்

★

**முருகூர்:**
கட்டபொம்மன் தெருவில்
19—9—57 இரவு 7 மணிக்கு
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
அரு. ஆதிமூலம்
மு. பெ. முத்துக்கருப்பன்
இரா. இளமுருகு
தி. இராமசாமி
இன்னிசை:
கும்பையன் குழுவினர்

## சென்னை--நுங்கம்பாக்கம் இளைஞர் மறுமலர்ச்சி மன்றப் பொதுக்கூட்டம்

19—9—57 மாலை 6-மணிக்கு, சென்னை-நுங்கம்பாக்கம் இராமநாய்க்கன் தெருவில், தோழர் தி. சு. கிள்ளிவளவன் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கண்ணதாசன், க. அறிவழகன், மா. செங்குட்டுவன், வ. சங்கரநாராயணன், இரா. சம்பந்தன், என்.டி. ஏழுமலை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கலைவாணர் என். எஸ். கே. படத்தை தோழர் சொர்ணம் திறந்துவைப்பார்.

## கோவை-கே. வி. கே. சாமி படிப்பகப் பொதுக்கூட்டம்

20—9—57 மாலை 6-மணிக்கு, கோவை சிரியன் சர்ச் தெரு-3, இலட்சுமி ரைஸ்மில் திடலில் மேற்படி படிப்பகச் சார்பில், திராவிட நாடு பிரிவினை வாரமும்; கே. வி. கே. சாமி நினைவு நாளும் கொண்டாடப்படும். தோழர் சே. அ. இராசமாணிக்கம் கொடியேற்றுவார். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

## வேளாள தேனும்பேட்டை தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழக ஆண்டு விழா

19—9—57 மாலை 6-மணிக்கு, சென்னை — வேளாளதேனும்பேட்டை, தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் முதலாண்டு விழா போலீஸ் நிலையம் அருகில் தோழர் ஏ. டேனியல் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் கண்ணதாசன், மதுரை எஸ். முத்து, தமிழ்ப்பித்தன், எஸ்.எஸ். தென்னரசு ஆகியோர் பேசுவர்.

## 'கட்டபொம்மன்' கோட்டை என்று பெயரிட!

சென்னை, செப். 18—

சென்னையில் உள்ள கோட்டை 'செயிண்ட் ஜார்ஜ் கோட்டை' என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பெயரை மாற்றி 'கட்டபொம்மன் கோட்டை' என்று அழைக்கவேண்டும் என்றும், சென்னை மாநிலத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடவேண்டும் என்றும் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மதுராந்தகத்திலிருந்து சென்னைக்குக் கால் நடையாக 'சிவப்புச் சட்டை'ப் படையினர் ஊர்வலமாக வந்து கோட்டை முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இவர்கள் அனைவரும் சோஷலிஸ்டுக் கட்சியினர் என்று கூறப்படுகிறது. ஆர்ப்பாட்டம் செய்த 21 பேர்களையும் போலீசார் கைது செய்துள்ளனர்.

# தாய்லாந்து ஆட்சிபீடம் இராணுவத்தின் கையில்!

## பிரதமர் கம்போடியாவுக்கு ஓட்டம்

பாங்காங், செப். 17—

சயாம் என்றழைக்கப்படும் தாய்லாந்து நாட்டில், ஆட்சிப் பீடத்தை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

பிரதம மந்திரி பிபுல் சங்கராம் என்பார் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ய வேண்டுமென, இராணுவத்தினர் கேட்டிருக்கின்றனர்.

இதற்கிடையில், தலைநகரான பாங்காங்கினை இராணுவத்தினர் சூழ்ந்துகொண்டபோதே, பிரதமர் கம்போடியாவிற்கு ஓடிப்போய் விட்டதாகவும் கூறப்படுகிறது.

பிரதம இராணுவ தளகர்த்தரான பீல்டுமார்ஷல்சாரித்தரைத் என்பார், நாடுமுழுவதும் இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்திருப்பதுடன், பாங்காங்கின் இராணுவ விவகாரங்களைப் பொறுத்துத் தான் பாதுகாப்பாளனாக நியமிக்கப்பட்டிருப்பதாகவும், தனக்கு மன்னரின் ஆதரவு கிடைத்திருப்பதாகவும் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

கடந்த ஒரு மாதகாலமாகவே இராணுவத்திற்கும், அரசாங்கத்திற்கும் தகராறுகள் இருந்து வந்தது; அதன் தொடர்ச்சியாகவே இந்த 'இராணுவப் புரட்சி' நடைபெற்றிருக்கிறது என்று கூறப்படுகிறது.

இந்த இராணுவ தளகர்த்தரின் கோரிக்கைக்கு, விமான—கப்பற் படைத் தளபதிகளும் பணிந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த முன் இரவில் பிரதமர் பிபுல் சங்கராம் பதவியிலிருந்து விலகவேண்டும் என்று கடைசியாகக் கேட்கப்பட்டபோதும் அவர் மறுத்துவிட்டதின் விளைவாக இந்த இராணுவ தளகர்த்தர் தலைநகரை நோக்கிப் படைகளை நகர்த்தி சர்க்கார்மாளிகையையும் போலீஸ் தலைமைக் காரியாலத்தையும் முற்றுகையிட்டு, தந்தி—டெலிபோன் போக்குவரத்துக்களைத் துண்டித்துவிட்டுப் பதவியைக் கைப்பற்றியிருக்கிறார்.

உடனேவானொலிமூலம பேசிய தளகர்த்தர் சாரித், சயாம் மக்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்றும், ஆட்சியைக் கைப்பற்ற வேண்டிய கட்டாயம் இராணுவத்திற்கு ஏற்பட்டது என்றும், காரணம், சயாம் வேகமாக, அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது என்றும் குறிப்பிட்டாராம்.

இவர், நாட்டில் ஒரு கூட்டு சர்க்காரை அமைக்க முயற்சித்துக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## காஞ்சித் தொகுதி வாக்காளர்கள் கவனிக்க!

காஞ்சி, செப். 17—

சென்னை சட்டசபைக்குக் காஞ்சீபுரம் தொகுதியைச் சேர்ந்த வாக்காளர்களின் பட்டியல் திருத்தப்பட்டு, 6—9—57-ல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வாக்காளர் பட்டியல் காஞ்சி நகராட்சி மன்றத்திலும், தாலுகா அலுவலகத்திலும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

வாக்குரிமை பெறத் தகுதியுள்ளவர்கள் அனைவரும் தங்கள் பெயர்கள் பட்டியலில் சரியாக உள்ளனவா என்று கவனிக்க வேண்டும். பட்டியலில் சேர்க்கப்படவேண்டிய தகவல்கள் ஏதேனும் விடப்பட்டோ, தவறாகவோ, இருப்பின் உடனே ஆவன செய்து, தங்கள் பெயர்களைச் சரிவரப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

27—9—57-க்குள் வாக்காளர் பதிவுப் பத்திரத்தில் எழுதி, தாசில்தாரிடம் கொடுக்க வேண்டும்.

கழகத் தோழர்கள் உடனே ஆவன செய்து, குறிப்பிட்ட காலத்திற்குள் வாக்காளர் பட்டியலில் எல்லோரும் வாக்குரிமைபெற உதவி புரிய வேண்டும்.

## தோழர்களுக்கு அறிவிப்பு

'திராவிடன்' பத்திரிகை அலுவலகத்தில் தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கோள்கிறோம்.

தொலை பேசி எண்: **55087**

நிர்வாகி: 'திராவிடன்'
16-99 அம்மன்கோயில்தெரு
சென்னை-1

## திராவிட நாடு விடுதலை வார விழாக் கூட்டம்

★

**சென்னை-வண்ணை:**

18—9—57 மாலை 6-30 மணிக்கு, வண்ணையம்பதி கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றத்தில் (54, சஞ்சீவிராயன் கோவில் தெரு), திராவிட நாடு பிரிவினை வாரவிழா கொண்டாடப்பெறும். தோழர்கள் கண்ணதாசன், எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

## தலைநகரில்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அவர் தலைமை உரையில் தி.மு. கழகத்தின் கொள்கைகளை விளக்கி, இவ்வட்டாரத்து மக்கள் 'உதய சூரியன் படிப்பகத்'தில் சேர்ந்து பயன்பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அடுத்து, தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் பேசுகையில், நமது கழக வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களை விளக்கி, உலகின் பல நாடுகள் விடுதலை பெற்ற விதத்தையும், மக்களின் விடுதலை வேட்கையையும் குறிப்பிட்டதுடன், எதிர்காலத்தில் கழகத்திற்கு உள்ள பொறுப்பினையும், மக்களின் கடமையையும் எடுத்துரைத்து, அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றி நவில, விழா இரவு 9-30 மணிக்கு முடிவடைந்தது.

★

## இன்னிசை விருந்து

சென்னை, செப். 18—

திராவிட நாடு விடுதலை வாரத்தை யொட்டி, நேற்று இரவு 8-30 மணிக்கு சென்னை அண்ணாபிள்ளைத் தெரு, கொத்தவால் சாவடிக்கு அருகில் ஓர் இன்னிசை நிகழ்ச்சி சிறப்புற நடைபெற்றது.

சேலம் சீனிவாசன் தம் குழுவினருடன் சிறந்த முறையில் இசை விருந்தளித்து கூடியிருந்த மக்களை மகிழ்வித்தார். நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் வி. முனுசாமி இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அருணா அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (34, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் [illegible]